கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1971-72-ல் இதற்காக செலவிடப்பட்ட தொகை 1,050 ரூபாய். 1972-73-ல் செலவிடப்பட்ட தொகை 2,650 ரூபாய். 3,700 ரூபாய் செலவிட்ட பிறகும் இந்தக் கட்டிடம் அஸ்திவார நிலையிலிருந்து மேலே வரவில்லை. அதற்குக் காரணமாக இருந்தவர் மன்றத் தலைவர் என்று குறிப்புகள் சொல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலே இந்தக் கட்டிடத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று ஆணையருக்கு ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கிறது; உடனடியாகக் கட்டி முடிக்கப்படும்.

தேவணம்பாளையம் செல்ல பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 52—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், தேவணம்பாளையத்திற்கு செல்வதற்கு பாதை வசதி ஏற்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட ஒன்றியத்திலிருந்து நடவடிக்கைக் குறிப்புகள் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாலை அமைக்க வேண்டிய நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுக்க ஒன்றிய ஆணையருக்கும் பெருந்துறை வட்டாட்சியருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, அந்த ஊர் தோன்றிய காலத்திலிருந்து இதுவரையில் அந்த ஊருக்குச் செல்ல வேண்டிய வழி இல்லை. மேலும், கால்நடையாகச் சென்று கொண்டிருந்த அந்த பாதையில்கூட மழை பெய்த காரணத்தால் விதை போட்டு, நடக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதை எல்லாம் பரிசீலனை செய்துதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைரமடை-தொப்பம்பட்டி சாலை.

*வினா எண் 53—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர்-கோவை நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் வைரமடை-தொப்பம்பட்டி சாலையில் தார் போடும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?